இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற மக்கள் மட்டுமல்ல, அகில உலகிலும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட புரட்சித் தாயினுடைய புனித அரசிலே இன்றைக்கு இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஆறு மாதக் காலம் ஆகும் என்று போற்றுதலுக்குரிய அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி தொழிற்சாலையே இல்லாமல் இருக்கிற எங்கள் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் உடனடியாகத் தொழிற்சாலை உள்ள மாவட்டம் என்று நிரூபிக்கிற அளவிலே வேறு ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் உடன் முன் வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டத்தில் தொழிற்சாலையே இல்லை என்பது என் கவனத்திற்கு வந்த பிறகு, இந்த இரும்புத் தாதுவைப் பயன்படுத்தி ஒரு பெரிய தொழிற்சாலையை உருவாக்குவதற்கு சில நாட்கள் ஆகும், சில காலம் ஆகும் என்பதை அறிந்த பிறகு, நானாகவே அங்கே சிறு தொழில்பேட்டை - சிறு தொழில்கள் அடங்கிய ஒரு தொழில்பேட்டையைத் தொடங்க வேண்டுமென்று கருதி, அதனை சிப்காட் வாயிலாகவோ, சிட்கோ மூலமாகவோ செய்ய வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடலூரில் கல்வி நிறுவனங்களில்......

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், பெரம்பலூரில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கொள்ளப் போகிறேன். தாங்கள் கொடுத்த அந்தப் பிரச்சினை குறித்து பொது விவாதத்தில் தெரிவிக்கலாம் என்பதால் அதற்கு அனுமதி மறுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதி மறுத்ததைப் பற்றி இங்கே சொல்ல முடியாது. இன்றைக்கு இன்னொரு பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.